**தருமபுரி மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் – திரு. கு.குணசேகரன், எம்.எ.எஸ்.சி., எம்.எட், எம்.பில்.,**

**மூ.மு.எண். 0551 / அ1 / 2023 நாள் 14 . 03. 2023**

பொருள் தமிழ்நாடு அமைச்சுப் பணி - பணிவரன்முறை - தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் **திரு.செ. பிரசாந்த்** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை ஆணை வழங்குதல் – சார்பாக

வட்டார கல்வி அலுவலகம்
11 MAY 2023
அரூர் கல்வி மாவட்டம்
பாப்பிரெட்டிப்பட்டி-636905

1 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய செயலாளரின் எண் 2563/PSD-12/2020 நாள் 21.07.2020

2 தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3655/அ1/2020 நாள் 17.09.2020

3 அரசாணை எண் 151 பள்ளிக் கல்வி (SE1(4)) த்துறை நாள் 09.09.2022

4 மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), அரூர் கடிதம் ந.க.எண் 783/அ1/2022 நாள் .01.2023

ஃஃஃ

பார்வை (1) இல் கண்ட தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக் குழு கடிதத்தின்படி 2018-2019, மற்றும் 2019-2020 இல் தேர்வாணையம் மூலம் நடத்தப்பட்ட தேர்வில் இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை (2)ல் கண்ட தருமபுரி முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி, வட்டாரக் கல்வி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக **21.09.2020 முற்பகல்** பணிநியமனம் பெற்று பணிபுரிந்து வரும் **திரு. செ. பிரசாந்த்** என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்திட கோரிய கருத்துருக்களை பார்வை 4 இல் கண்டவாறு அரூர், மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) பரிந்துரை செய்து பணிந்தனுப்பியுள்ளார்.

பார்வை (3)இல் கண்ட அரசாணையில் இளநிலை உதவியாளருக்கான நியமன அலுவலர் முதன்மைக் கல்வி அலுவலர் என தெரிவிக்கப்பட்டுள்ளதால், கலம் 2 இல் கண்ட பணியாளருக்கு கலம் 4ல் கண்ட நாளில் **பணிவரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.**

| வ. எண் | பணியாளர் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி | இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்யும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | **திரு.செ. பிரசாந்த்,**<br>இளநிலை உதவியாளர்<br>வட்டாரக் கல்வி அலுவலகம்,<br>பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம் | 21.09.2020<br>முற்பகல் | 21.09.2020<br>முற்பகல் |

2...

ATTESTED

Block Educational Officer
PAPPIREDDIPATTI.

Scanned with OKEN Scanner

சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளையில் இந்த நியமனம் சார்ந்து நிலுவையில் உள்ள 2018-19 மற்றும் 2019-2020 ஆண்டுகளில் தொகுதி IV இன் கீழ் உள்ள பணிகளுக்கான நியமனம் தொடர்பான வழக்குகளின் முடிவிற்கு உட்பட்டு இந்த பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் **பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தொடர் மூன்றாண்டு பணிக்காலத்தில் ஈராண்டுக் காலம் தகுதிக்காண்** பருவ காலமாக நிர்ணயம் செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தகுதிகாண் பருவத்தில் வரையறுக்கப்பட்ட மாவட்ட அலுவலக நடைமுறை தேர்வினையும், இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியினையும் (பவானிசாகர் பயிற்சி) முடித்தல் வேண்டும். தகுதிகாண்பருவம் முடித்தமைக்கான ஆணை பெறப்பட்ட பின்னரே இரண்டாவது ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்க வேண்டும்.

பணிவரன்முறை செய்யப்பட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள சார்ந்த வட்டாரக் கல்வி அலுவலருக்கு தெரிவிக்கப்படுகிறது.

பணியாளரின் சார்பாக பெறப்பட்ட அசல் பணிப்பதிவேடு ஒரு பைண்டு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை அனுப்பி வைத்திட பாப்பிரெட்டிப்பட்டி, வட்டாரக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு -

அசல் பணிப்பதிவேடு ஒரு தொகுதி

14-3-23

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி.

14/3/23

பெறுதல்

**திரு.செ. பிரசாந்த்**, இளநிலை உதவியாளர், வட்டாரக் கல்வி அலுவலகம்,
பாப்பிரெட்டிப்பட்டி, தருமபுரி மாவட்டம்.

நகல் - வட்டாரக் கல்வி அலுவலர், பாப்பிரெட்டிப்பட்டி
நகல் - மாவட்டக் கல்வி அலுவலர், (தொடக்கக் கல்வி), அரூர்.

நகல் பெற்றுக்கொண்டேன்

11/05/2023